பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 04 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்துவதற்காக மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய விதிகள் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளன.

**2.** மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை பணிகளில் மத்திய அரசு ஊழியர்களை ஈடுபடுத்த தேர்தல் ஆணையம் எடுத்த முடிவை எதிர்த்த வழக்கை கொல்கத்தா உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

**3.** மத்திய உள்துறை அமைச்சர் **திரு. அமித் ஷா** இன்று லே பகுதியில் புத்தரின் புனிதத் திருவுருவச் சின்னங்கள் கண்காட்சி மற்றும் புத்த பூர்ணிமா கொண்டாட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

**4.** நாட்டில் போதுமான அளவு உரம் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**5.** தாமஸ் கோப்பை பேட்மிண்டன் காலிறுதிப் போட்டியில் இந்தியா இன்று சீன தைபேய் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்துவதற்காக மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய விதிகள் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளன.

இந்த புதிய விதிகளின்படி, திறமை அல்லது அதிர்ஷ்டம் என எதன் அடிப்படையில் விளையாடினாலும், ஆன்லைன் மூலம் பணம் வைத்து விளையாடும் அனைத்து விளையாட்டுகளுக்கும் மத்திய அரசு முழுமையாக தடை விதித்துள்ளது.

இத்தகைய விளையாட்டுகள் தொடர்பான விளம்பரங்களுக்கும், பணப் பரிவர்த்தனைகளுக்கும் இனி அனுமதி கிடையாது.

இந்த விதிகளை மீறுவோர் மீது சிறைதண்டனை மற்றும் அபராதம் போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறையைக் கண்காணிக்க, ‘இந்திய ஆன்லைன் விளையாட்டு ஆணையம்’ என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆன்லைன் விளையாட்டுகளில் வயது சரிபார்ப்பு, நேரக் கட்டுப்பாடு மற்றும் பெற்றோர் கட்டுப்பாட்டு வசதி போன்ற பாதுகாப்பு முறைகள் இனி கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்ற தூதரக அதிகாரிகளின் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று உரையாற்றினார்.

வெளி நாடுகளில் இந்தியாவின் நலன்களை மேம்படுத்துவது குறித்து இந்த மாநாட்டின்போது பிரதமர் அவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கியதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஏற்பாட்டில் கடந்த 3 நாட்களாக நடைபெற்ற இந்த மாநாட்டை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பல்வேறு நாடுகளில் பணிபுரியும் இந்திய தூதரக அலுவலர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சர்வதேச விவகாரங்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், எதிர்கால தேவைகள், வெளியுறவுக் கொள்கை தொடர்பான நடைமுறைகள் குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை பணிகளில் மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்த தேர்தல் ஆணையம் எடுத்த முடிவை எதிர்த்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தொடர்ந்த வழக்கை கொல்கத்தா உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மத்திய அரசு ஊழியர்களை மேற்பார்வையாளர்களாகவும் உதவியாளர்களாகவும் நியமிப்பது சட்டப்படி செல்லுபடியாகும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

இத்தகைய நியமனங்கள் தேர்தல் ஆணையத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்குள் வருவதாகவும், இதில் எவ்வித சட்டவிரோதமும் இல்லை என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

மேலும், இது தொடர்பாக ஏதேனும் புகார்கள் இருப்பின், தேர்தல் முடிந்த பிறகு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்து தீர்வு காணலாம் என்று அறிவுறுத்தியது.

இந்தத் தீர்ப்பை வரவேற்ற மேற்குவங்க தலைமை தேர்தல் அதிகாரி திரு. மனோஜ் குமார் அகர்வால், தேர்தல் பணியில் யாரை இணைக்க வேண்டும் என்பதை அந்தந்த தேர்தல் நடத்தும் அதிகாரிகளே முடிவு செய்வார்கள் என்றும், அதில் அரசியல் கட்சிகள் தலையிட முடியாது என்றும் விளக்கமளித்தார்.

ஆனால் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு ஒருதலைப்பட்சமாக இருப்பதாக குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

நாட்டில் போதுமான அளவு உரம் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய உரத்துறை கூடுதல் செயலர் அபர்ணா சர்மா, கரிஃப் பருவத்திற்கு போதுமான உரம் இருப்பதாக தெரிவித்தார்.

உள்நாட்டு உர உற்பத்தி 62 லட்சத்து 37 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உள்ளதாக கூறிய அவர், 15 லட்சத்து 39 ஆயிரம் மெட்ரிக் டன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

38 லட்சம் மெட்ரிக் டன் யூரியா, 19 லட்சம் மெட்ரிக் டன் பொட்டாசியம் உரம் இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும் அபர்ணா சர்மா தெரிவித்தார்.

<<<<>>>>

கௌதம புத்தர் பிறந்த நாளைக் குறிக்கும் வகையிலும், பீகார் மாநிலம் புத்தகயாவில் உள்ள மகாபோதி மரத்தின் அடியில் புத்தர்

ஞானம் பெற்ற நாளை குறிக்கும் வகையிலும் புத்த பூர்ணிமா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதும் உள்ள பௌத்தர்களாலும், இந்துக்களாலும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

இந்தியா, நேபாளம், பூடான், பர்மா, தாய்லாந்து, திபெத், கொரியா, லாவோஸ், வியட்நாம், மங்கோலியா, கம்போடியா, சிங்கப்பூர், இந்தோனேசியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் இது ஒரு முக்கிய பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், புத்தரின் கருணை, அஹிம்சை, அமைதி, ஞானம் குறித்த செய்திகள் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கு தொடர்ந்து வழிகாட்டும் என்று கூறியுள்ளார்.

இன்றைய உலகம் எண்ணற்ற சவால்களைச் சந்தித்து வரும் நிலையில், அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் பரஸ்பர நல்லிணக்கத்தின் பாதையில் பயணிப்பதற்கு புத்தரின் போதனைகள்

அனைவருக்கும் என்றென்றும் வழிகாட்டும் என்றும் குடியரசுத்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று லே பகுதியில் உள்ள சோக்லம்சர், போட்டாங், ஜிவே-ட்சல் **(JiveTsal)** ஆகிய இடங்களில் புத்தரின் புனிதத் திருவுருவச் சின்னங்கள் கண்காட்சி மற்றும் **2569**-வது புத்த பூர்ணிமா கொண்டாட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

தொடர்ந்து, லே பகுதியில் உள்ள மத்திய பௌத்த ஆய்வுகள் நிறுவனத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் அவர், கார்கில் பகுதியில் நாளொன்றுக்கு **10** ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பண்ணை ஆலை அமைப்பதற்கு அடிக்கல்லை நாட்டுகிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரக போராட்டத்தை நினைவுகூறும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte — Selvan Jebaraj — 70 Sec)

<<<<>>>>

நகர்ப்புற போக்குவரத்து தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது தொடர்பாக கொல்கத்தா மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கும் - சென்னை ஐ.ஐ.டி. இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

மெட்ரோ ரயில் இயக்கத்தில் கூட்டாக ஆராய்ச்சியில் ஈடுபடுவது, உள்நாட்டு திறனை மேம்படுத்துவது உள்ளிட்டவை இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

குறுகிய வளைவுகள், செங்குத்தான சரிவுகளைக் கொண்ட கடினமான பாதைகளில் மெட்ரோ ரயில்களை சிரமமில்லாமல் இயக்குவது தொடர்பான ஆராய்ச்சிக்கு இந்த ஒப்பந்தம் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங்களிலும், இமயமலையை ஒட்டியுள்ள மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் பகுதிகளிலும் ஒருசில இடங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

அதேபோல் அஸ்ஸாம், மேகாலயா, கேரள மாநிலம் மற்றும் மாஹே, உள் கர்நாடகாவின் தெற்குப் பகுதிகள், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய இடங்களிலும் ஒருசில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதர்பா பிராந்தியத்தில் ஒருசில இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

தாமஸ் கோப்பை பேட்மிண்டன் காலிறுதிப் போட்டியில் இந்தியா இன்று சீன தைபேய் அணியை எதிர்கொள்கிறது.

டென்மார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்திய அணி லீக் ஆட்டத்தில் கனடா, ஆஸ்திரேலியா அணிகளை வென்றது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி - கோவா அணியை எதிர்கொள்கிறது.

ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் கோவா அணி 10 போட்டிகளில் பங்கேற்று 5-ல் வெற்றி பெற்று 19 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது.

ஜம்ஷெட்பூர் அணி 18 புள்ளிகளுடன் 5வது இடத்தில் உள்ளது.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, 19 புள்ளி 2 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 155 ரன் எடுத்தது.

156 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய குஜராத் அணி 15 புள்ளி 5 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

ஜெய்ப்பூரில் இன்று இரவு மணி 7.30க்கு நடைபெறும் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>